நல்லூரிலே நூலகம்
மாநகரசபை மன்றம்
யாழ்ப்பாணம்

தரப் பந்தல், கதிரைகள், சில்வர் கப், பீங்கான் இன்னும் பல உபகரணங்களை வாடகைக்கு பெற நாடுங்கள்
"ஒளி இல்லம்"
210, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

மக்களின் நாளுக்கு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 5-00

For all Ceremonies
At your homes
Our service available.
OLI ILLAM
210, Main Street,
[Near st. James Church]
Jaffna.

கடல் 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆனி 10 வியாழக்கிழமை (24-06-1993) UTHAYAN – A Lively National Tamil Daily கதிர் 208

அழுத்தம் போட்டு பேச்சுக்கு அழைக்கும் தமது முயற்சியில் புலிகளுக்கு முழுவெற்றி!

மண் எண்ணெய், டீசலுடன் றுகுணு ஞாயிறு வந்துசேரும்

யாழ்ப்பாணம், ஜூன் 24
யாழ்.குடாநாட்டுக்கு எடுத்துச் செல்ல அரசினால் தடை நீக்கம் செய்யப்பட்ட அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிக்கொண்டு, கப்பல் ஒன்று நாளை கொழும்பில் இருந்து பருத்தித்துறை நோக்கி புறப்படும் என்று இலங்கை வானொலி அறிவித்தது.

இக்கப்பல் ஞாயிறன்று பருத்தித்துறையை வந்தடையும் என்றும் அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கப்பலில் எடுத்து வரப்படும் பொருள்களின் விவரங்கள் வெளியிடப்படவில்லை.

இதேவேளை —
எதிர்வரும் ஞாயிறன்று பருத்தித்துறைக்கு வரவுள்ள 'றுகுணு' என்ற கப்பலில் டீசல், மண் எண்ணை என்பன எடுத்து வரப்படுவதாக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். வதிவிடப் பிரதிநிதி தெரிவித்துள்ளார். (உ-5)

ஐந்நூறு பரல் பெற்றோல் தரைமார்க்கமாக வரும்?

வவுனியா கூடாக உடனடியாக ஐந்நூறு பரல் பெற்றோலை வடக்கே அனுப்பி வைக்க அரசுத் தரப்பில் இணக்கம் காணப்பட்டிருப்பதாக அறியவருகிறது.

பெற்றோல் இலகுவாகத் தீப்பற்றக் கூடியது என்பதனால் சாதாரண கப்பல்களில் அதனை வடபகுதிக்கு அனுப்புவதில் எழக் கூடிய சிக்கல்கள் குறித்து கொழும்பில் ஆராயப்பட்டு வருவதாகவும்—

அதனால் கப்பலில் பெற்றோல் எடுத்து வரப்படுவது குறித்து இன்னமும் அரசுத் தரப்பில் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை என்றும் அறியவருகிறது.

இதே வேளை—
தடை நீக்கப்பட்ட பொருள்களை துரிதமாக வடபகுதிக்கு அனுப்புவது குறித்து ஆராய்வதற்காக நேற்று கொழும்பில் கூட்டப்பட்ட உயர் மட்டக் கூட்டம் ஒன்றில் யாழ். அரச அதிபர் திரு. மாணிக்கவாசகர் பங்குபற்றியதாக அறியவந்தது. (உ-5)

வவுனியாவில் முழுமுரமாக நேற்று சைக்கிள் விற்பனை

வவுனியா, ஜூன் 24
வடபகுதிக்கு சைக்கிள்களை எடுத்து வருவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை ஸ்ரீலங்கா அரசு நீக்கியிருப்பதை அடுத்து—

வவுனியா நகரில் உள்ள கடைகளில் சைக்கிள் விற்பனை நேற்று வெகு மும்முரமாக இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியாவுக்கு வந்தவர்கள் பெரும் எண்ணிக்கையில் சைக்கிள்களை வாங்கிக் கொண்டனர் என்றும்—

நேற்றையதினம் போன்று வவுனியாவில் ஒரு போதும் சைக்கிள்கள் விற்பனையாகவில்லை என வவுனியா வர்த்தகர்கள் குறிப்பிட்டனர்.

தடை நீக்கப்பட்ட பொருள்கள்

மட்டுப்படுத்தப்பட்ட அளவு எடுத்து வரவே இணக்கம்

உயர் பாதுகாப்பு அதிகாரி கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 24
தடைநீக்கப்பட்ட பொருள்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வடக்குக் கொண்டு செல்ல தாங்கள் இணங்கியிருப்பதாக உயர் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்தார் என்று "வெரிற்தாஸ்" வானொலி அறிவித்தது.

எரிபொருள், மருந்துப் பொருள்கள், துவிச்சக்கர வண்டிகள், தீப்பெட்டிகள், உரவகைகள், காகிதாதிகள், டிரான்ஸிஸ்டர் வானொலி கள ஆகிய பொருள்கள் மீதான தடையே நீக்கப்பட்டிருப்பதாக அந்த அதிகாரி குறிப்பிட்டார். (உ-6)

தடுப்புக் காவலில் இருந்தபோது

தவறான வகையில் எம்மை புலிகள் நடத்தவில்லை

கொழும்பில் வைத்துப் பேட்டி

கொழும்பு, ஜூன் 24
"தடுப்புக் காவலில் எங்களை வைத்திருந்த போது உண்மையில் முறையற்ற வகையில் புலிகள் எங்களை நடத்தவில்லை.

விடுதலையாகி கொழும்பு சென்ற பொலீஸ் கான்ஸ்டபிளான சரத்குமார அங்கு செய்தியாளர்களிடம் பேசிய போது இன்னும் குறிப்பிட்டார்.

தாங்கள் மேற்கொண்ட உண்ணாவிரதம் காரணமாக தாம் அசதியும்' களைப்புமுற்றிருப்பதாகவும்—

அதனால் விடுதலைப் புலிகளின் காவலில் இருந்த வாழ்க்கை பற்றி இப்போது விளக்கிக் கூறமுடியாது என்றும் அவர் செய்தியாளர்களிடம் மேலும் கூறினார்.

கைதிகள் விடுவிப்பு குறித்து ராணுவ நிபுணர்கள் கருத்து

கொழும்பு, ஜூன் 24

கைதிகள் விடுவிப்பு விடயத்தில் அரசின் பிரதிநிதியை நேரடிப் பேச்சுக்கு அழைத்து, தமது நிபந்தனைக்கு அரசை இணங்கச் செய்ததன் மூலம், அரசின் மீது அழுத்தத்தைப் பிரயோகித்து அரசைப் பேச்சுக்கு அழைக்கும் தமது மதிநுட்பத்தை புலிகள் நிரூபித்திருக்கிறார்கள்.

— இவ்வாறு இராணுவ நிபுணர் ஒருவர் கருத்து வெளியிட்டதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று குறிப்பிட்டது.

சில யுத்தக் கைதிகளை மட்டும் விடுதலை செய்வதற்காக விடுதலைப் புலிகளுக்கு சில முக்கிய சலுகைகளை வழங்க அரசு இணங்கியிருக்கிறது.

இவ்வாறு அரசை இணங்கச் செய்ததன் மூலம் விடுதலைப் புலிகள் தமது சக்தியை மீண்டும் ஒருமுறை நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள்.

— இப்படி அந்த நிபுணர் மேலும் குறிப்பிட்டதாக வெரிற்தாஸ் வானொலி குறிப்பிட்டது

வடபகுதி மக்கள் போதிய உணவு மற்றும் பொருள்கள் இன்றி வாடுவது குறித்து கவலை கொண்டிருக்கும் விடுதலைப் புலிகளுக்கு தற்போது பொருள்களை வழங்க அரசு முன்வந்துள்ளது. இதுகுறித்து மூத்த இராணுவ அதிகாரிகள் அதிருப்தியடைந்து இருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தமது பேச்சுவார்த்தையின்

(3 ஆம் பக்கம் பார்க்க)

புலிகளின் கை ஓங்கியுள்ளது

பி. பி. ஸி. விமர்சனம்

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த அரசு தனது விசேட பிரதிநிதியை அனுப்பியதும்—

அப்போது அரசு மீது விடுதலைப் புலிகள் அழுத்தம் கொடுத்ததும்—

புலிகளின் கை ஓங்கியிருப்பதையே காட்டுகிறது

—இவ்வாறு பி.பி.ஸி. கருத்து வெளியிட்டது.

இராணுவத்தில் தற்போது பணியாற்றிக் கொண்டிருக்கும் அதிகாரிகளை விடுத்து, இராணுவத்துக்கு அப்பால் செயற்படும் ஒரு அதிகாரியை தனது பிரதிநிதியாக ஸ்ரீலங்கா அரசு புலிகளிடம் அனுப்பி இருக்கிறது. இப்படி நடந்து கொண்டதால் புலிகளின் ஏமாற்றதலுக்கு அரசு இலக்காகி விட்டது. —இவ்வாறு பிரேஸ்ட இராணுவ வட்டாரங்கள் கருதுவதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று குறிப்பிட்டது (உ-எ-6)

தடை நீக்கப்பட்ட

பொருள்களின், தேவை விவரம் அரசுக்கு அனுப்ப ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 24
தடை நீக்கம் செய்யப்பட்டுள்ள பொருள்களைக் கொள்வனவு செய்வது தொடர்பாக — வடபகுதி மக்களின் தேவையை பூர்த்தி செய்யத் தேவையான — பொருள்களின் விவரப்பட்டியல் ஒன்றைத் தயாரித்து அரசுக்கு அனுப்பத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ். செயலகத்தில் நேற்று கூட்டப்பட்ட அவசர மாநாட்டில் இதுபற்றி முடிவு எடுக்கப்பட்டது. மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ப. நிலகநாயகம் மாநாட்டுக்குத் தலைமை வகித்தார்.

முன்னுண்ட தீர்மானத்தைத் தொடர்ந்து—

வடக்கே எடுத்துவர தடை நீக்கப்பட்டுள்ள பொருள்களின் தேவை குறித்து, உடனடியாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ். மாவட்டத்திலுள்ள சகல திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், வங்கிகள், ப. நோ. கூ. சங்கங்கள் கேட்கப்பட்டுள்ளன.

தடை நீக்கப்பட்ட பொருள்களை உடனே வடக்கிற்கு எடுத்துவர வசதியாக இங்குள்ள சகல திணைக்களங்களிடமும், மற்றும், கூட்டுத்தாபனங்கள், வங்கிகள், ப. நோ.

(3 ஆம் பக்கம் பார்க்க)

தமிழ் காவல்துறையின் வவுனியா காவல் பணிமனை கடந்த 16 ஆம் திகதி நிறந்து வைக்கப்பட்டிருக்கிறது. [illegible] முன்னிலையில் தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் [illegible] நவரத்தினம் தளபதி கமலன் (ஜூன்) ஆகியோர் நின்ற போது எடுக்கப்பட்ட படம்.

குமணவில் இருதடவைகள் நோயாளர் பயணச் சேவை

யாழ்ப்பாணம், ஜூன் 24
பருத்தித்துறையில் தற்காலம் பொருள்களை இறக்கிக் கொண்டிருக்கும் 'குமண' கப்பலை இரு தடவைகள் நோயாளர் பயண சேவையை மேற்கொள்ளவிருக்கிறது.

எதிர்வரும் 28 ஆம் திகதி பருத்தித்துறையில் இருந்து அரச ஊழியர்களுடன் திருமலை செல்லும் "குமண" கொழும்பில் சிறிசரை முடித்துக்கொண்டுதிரும்பும் நோயாளர்களை திருமலையில் வைத்து ஏற்றிக்கொண்டு அடுத்த நாள் 29 ஆம் திகதி பருத்தித்துறையை நோக்கித் திரும்பும்.

மீண்டும் கொழும்பு செல்லும் நோயாளர்களை பருத்தித்துறையில் இருந்து அன்றைய தினமே ஏற்றிக் கொண்டு திருமலை நோக்கிச் செல்லும் "குமண" பின்னர் அங்கிருந்து கொழும்பு நோக்கிச் செல்லும். (உ-3)

நில்கிரியில் மண்எண்ணெய் வருகிறது

யாழ்ப்பாணம், ஜூன் 24
ஆயிரத்து 500 பரல் மண்எண்ணையை ஏற்றிக் கொண்டு 'நில்கிரி' கப்பல் இன்னும் இரண்டொரு தினங்களில் பருத்தித்துறை நோக்கி புறப்படும் என கொழும்பில் இருந்து கிடைத்த தகவல் ஒன்று தெரிவித்தது [உ-5]

அராலிப் பகுதி மக்கள் நேற்று மறியற் போர்

அராலி, ஜூன் 24
அராலிப் பகுதி மக்கள் நேற்று வலி. மேற்கு பிரதேச அலுவலகத்தின்முன்னால் கூடி மறியல் போராட்டம் நடத்தினர்.

'பூமியதிர்ச்சி' இராணுவநடவடிக்கையால் பாதிக்கப்பட்ட தங்களுக்கு,ஏப்ரல்மாதம் தொடக்கம் திருத்தப்பட்ட இலவச உணவு விநியோகத்தை வழங்குமாறு கோரியே அவர்கள் மறியல் போராட்டம் நடத்தினர்.

(3 ஆம் பக்கம்) பார்க்க)

பிரிகேடியர் கொழும்பு சென்றார்

யாழ்ப்பாணம், ஜூன் 24
நேற்று முன்தினம் இங்கு தங்கியிருந்த பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா நேற்றுக் காலை 7-30 மணியளவில் கொழும்பு செல்வதற்காகப் பருத்தித்துறையில் இருந்து புறப்பட்டுச் சென்றார்.

இன்று அல்லது நாளை அவர் மீண்டும் இங்கு வருவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-5)

2 பற்றறிகளை எடுத்து வர அனுமதி!

ஒருவர் இரண்டு பற்றறிகளை வவுனியாவில் வாங்கி யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச் செல்ல இராணுவ அதிகாரிகள் அனுமதித்திருப்பதாக பி.பி.ஸி செய்தி ஒன்று தெரிவித்தது. (உ-எ)

களுத்துறை ப.நோ.கூ.சங்க பணம் ரூ.3 லட்சம் கொள்ளை

சூட்டுக்கு இலக்காகி காசாளர் பலி

களுத்துறை ப.நோ.கூ. சங்கத்தில் 3 லட்சத்து 16 ஆயிரம் ரூபா பணம் ஆயுதக் கோஷ்டி ஒன்றினால் நேற்றுக் காலை கொள்ளையடிக்கப்பட்டது.

இச்சம்பவத்தின் போது கூட்டுறவுச் சங்க பிரதம காசாளர் கொள்ளையரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார்.

வங்கி ஒன்றில் லைப்புச் செய்ய பணம் எடுத்துச் செல்லப்பட்ட வேளை இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக அறிவிக்கப்படுகிறது. (ஒ)

ஷெல்மீதுகல்எறிந்தசிறுவன் படுகாயம் அடைந்தான்

கோண்டாவில் மேற்கில் சம்பவம்

கொக்குவில், ஜூன் 24
வீட்டு வளவு ஒன்றில் கவலிப்பாரற்றுக் கிடந்த ஷெல் மீது கல்லெறிந்த சிறுவன் காலில் படுகாயமடைந்தான்; அருகில் நின்ற மூன்று சிறுவர்கள் தெய்வாதீனமாக காயமின்றித் தப்பிக்கொண்டனர்.

நேற்று மாலை 5 மணியளவில் கோண்டாவில் மேற்கில் இச்சம்பவம் இடம்பெற்றது

குரும்பசிட்டியிலிருந்து இடம்பெயர்ந்து கோண்டாவில்மேற்கில் வசித்துவந்த சத்தசாமி சஞ்ஜீவன் (வயது 9) என்ற சிறுவனே காயமுற்ற நிலையில் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டான்.

தன்னுடன் கூட நின்ற மூன்று சிறுவர்களை அருகில் பாதுகாப்பான இடத்தில் வீழ்ந்து படுத்திருக்கும்படி கூறிவிட்டே இச்சிறுவன் ஷெல் மீது கல்லெறிந்ததாகவும்—

அதனால் அந்த மூன்று சிறுவர்களும் காயமின்றித் தப்பியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பலத்த சத்தத்துடன் ஷெல் வெடித்தது. அருகில் இருந்த எட்டுச் சுவர்கள் சேதமாகின. ஷெல்லின் விசிறி பல வீடுகள் தள்ளிப் போய் வீழ்ந்தது. (உ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறு விளம்பரம்

G.C.E O/L வினா விடை

உயர் கல்விச்சேவை நிலையத்தின் கடந்தகால வினா-விடை 1992 உட்பட சகல பாடங்களும், 5ஆம் ஆண்டு புலமைபரிசில் பரீட்சைக்கான வினா-விடையும் விற்பனையாகிறது. அறிவகம் புத்தகசாலை, 374, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (வெலிங்டன் சந்திக்கு அருகில்.)
(சி-5326)

கோழிகள்

முட்டையிடும் பேட்டுக் கோழிகள் லக்கான், கோல்டன் கொமற், ஊர்க் கோழிகளும் நல்ல நிலையிலுள்ள கோழிகளும் விற்பனைக்கு உண்டு. G. காந்தன் [சிறீ கடை அருகில்] தபாற்பெட்டிச் சந்தி, அரியாலை. [26323]

மணப்பெண் தேவை

விசாலம், தோஷமற்ற, 31வயதான ஜேர்மனியில் பதிவு வருடங்களாக விசாவுடன் நிரந்தர தொழில்புரியும் தொழிற்துறையாளருக்கு மணப்பெண் தேவை. Sponser செய்ய அழைக்கலாம். ஜேர்மனியில் தொடர்புடையவர்களும் விண்ணப்பிக்கலாம். புதிய மரங்கல்லூரி மல்லி சோலை 361, பருத்தித்துறை வீதி, நல்லூர். (26132)

மணமகள் தேவை

லண்டன் M.Sc. பொறியியலாளர், வயது 32, ஆயிவம் 3ஆம் பாதம் செவ்வாய்க் குற்றமில்லை. தம்பியும், மைத்துனரும் பொறியியலாளர், 28 வயதுக்குக் குறைந்த, சிவத்த, அழகிய சைவமய M.B.B.S. டாக்டர் மணமகள் தேவை. B.Sc. மணமகள் தேவை. தொடர்பு சாதகத்துடன், இ. கனகசபாபதி விதானையார், 22, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை. (6174)

பிரான்சில் தொழில்புரியும் 34 வயது, சித்திரை 2ஆம் பாதம் மணமகனுக்கு உடனடியாக மணமகள் தேடுகிறார்கள். கொழும்பில் வந்து மணவிழா நடத்தமுடியும். மணமகள் பிரான்ஸ் செல்லவேண்டும். சீதனம் அதிகம் எதிர்பார்க்கப்படவில்லை. பொருத்தமான குறிப்புடன் உடன் விண்ணப்பிக்கவும். இல. 533, மேலப் உதயன், யாழ்ப்பாணம். [26208]

இல்லச் இருமணசேவை

28வயது, உத்தரப், கனடாவில் தொழில்புரிபவருக்கு அழகான மணப்பெண் தேவை. இலங்கைத் திருமணம். கனடா மணப்பெண்ணும் விண்ணப்பிக்கலாம். மணமகளுக்கு தொடர்பு: ஞானி [illegible] விமலா இல்லச் திருமண சேவை நாச்சிமார் கோவிலடி.
(26203)

புதிய வகுப்பு

Engineering Drawing [illegible] தியல மாணவர்களுக்கான புதிய வகுப்புகள் ஆரம்பம். தொடர்பு: 3 [illegible] வீதி, நல்லூர். (26217)

மாற்றம்

[illegible] 0-06-1993 [illegible] 239, [illegible] மாற்றம் செய்யப்படுகிறது.
6231)

வகுப்பு

Spoken English English with Grammar and German Languages. [illegible] ஜேர்மன் மொழி [illegible] - தனியாகவும் சிறு குழுக்களாகவும் [illegible] தொடர்புகொள்க: S. [illegible], இல. 4, [illegible], யாழ்ப்பாணம். (K.K.S வீதி, மனோரா [illegible]) (26147)

பிரதமர் ரணில் நாடு திரும்பினார்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று அதிகாலை கொழும்பு திரும்பினார்.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திற்கு பிரான்ஸின் [illegible] பாரிஸுக்குப் பின்னர் இந்தியாவுக்கும் பிரதமர் விக்கிரமசிங்க சென்றிருந்தார். (ஐ)

இரண்டாவது

பிறந்த தின வாழ்த்து

★ செல்வி நிதர்சனா ★

யாழ்ப்பாணம் 132, கன்தூரியார் றோட்டில் வசிக்கும் சண்முகராஜா - விமலாதேவி தம்பதிகளின் செல்வப் புதல்வி நிதர்சனா இன்று 24-06-1993 தனது இரண்டாவது பிறந்தநாளைச் சிற பாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அம்மம்மா, அப்பம்மா, மாமாமார், பெரியப்பா, சித்தப்பாமார், அன்ரிமார், அத்தைமார், அக்காமார், அண்ணன் மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் கன்னாதிட்டி காளியம்மாள் அருள் பெற்று, பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென அன்புடன் வாழ்த்துகின்றார்கள்.
(6231)

புலமைப் பரிசில்

மொழித் தேர்ச்சி ஆண்டு -5

★ ஆண்டு -5 புலமைப்பரிசில் பரீட்சையில் தமிழ் மொழிப் பாடத்தில் உச்சப்புள்ளி பெற உதவும் உயரிய நூல்.

★ வினாப் பத்திரத்தில் இடம்பெறத் தகுதி அனைத்து வகை வினாக்களும் 21 அலகுகளாக வகுக்கப்பட்டு ஆக்கப்பெற்ற அரிய நூல்.

★ அனைத்து அலகுகளையும் முறையுறப் பயின்றால் புலமைப்பரிசில் நிச்சயம்.

ஆக்கம்:

பண்டிதர் சு. வேலுப்பிள்ளை (சு. வே)

வெளியீடு:

ஸ்ரீசுப்பிரமணிய புத்தகசாலை

235, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(6280)

7ஆம் ஆண்டு பிரிவுத் துயர்

செல்வன்

சிறீரங்கநாதன் முருகதாஸ்

மலர்வு: 05—04—1962 உதிர்வு: 24—06—1986

எங்கள் அன்பு மகனே! உனைப்பிரிந்து ஏழு ஆண்டா! நம்ப முடியவில்லை மகனே! நம்ப முடியவில்லை உனைச் சந்தியப் பிரிந்த துயர் என்றென்றும் எம்நெஞ்சில் நிலைத்திருக்கும்!

தந்தை, தாய், அன்புத் தங்கை சாலினி, உற்றார், உறவினர்கள்.

நிரந்தர முகவரி: "ஆனந்தபவனம்", [illegible] மானிப்பாய்

தற்போதைய முகவரி: B.M. [illegible], யாழ்ப்பாணம்.
(6261)

மல்லாகம், கோட்டைக்காடு
காளாம்பை முருகமூர்த்தி ஆலய

வருடாந்த அலங்கார உற்சவம்

26-06-1993 சனிக்கிழமை முதல் 05-07-1993 திங்கட்கிழமை வரை திருவிழா நடைபெறும்.

சிவத்திரு. வ. குமாரசாமிஐயர் அவர்களின்

கந்தபுராண சிந்தனைகள்

தினமும் இரவு 8 மணி முதல் 9 மணி வரை இடம்பெறும்.

தீர்த்தம்: 06—07—1993
பூங்காவனம்: 07—07—1993

ஆலய பரிபாலனசபை,
இந்து இளைஞர் தொண்டர்சபை.
[5973]

ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு: 30—08—1948 உதிர்வு: 24—06—1992

திருமதி

கெலன் யோகராணி ஞானராசா

ஓர் ஆண்டு முடிந்ததம்மா! உந்தன் உருவம் கண்டு ஒளித் தீங்கள் போலே, எம் உணர்வில் நீ இருந்தாய் அம்மா!

பாழா நோய் உன்னை துடிதுடிக்க வைத்ததம்மா! பிரிவுத்துயர் தாளவில்லை பிரிந்து சென்று விட்டாய் அம்மா!

எரியும் தணலாய் ஏக்கங்துயர் தந்தாய் அம்மா!
உந்தன் புன்சிரிப்பும் இனிய பேச்சும்
உறக்கத்திலும் எம் முன்னே தோன்றிட
எங்கு சென்றாய் அம்மா செல்வமே ராணி!
எங்கள் இதயத் தடாகத்திலே
என்றும் இணைந்திருப்பாய்

உமது பிரிவால் துயருறும்:
கணவன், தாய், அண்ணா,
தம்பி, தங்கை மற்றும்
உற்றார், உறவினர், நண்பர்கள்.

ஸ்ருடியோ வீதி,
அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.
(26216)

43ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்

அமரர் குலசிங்கம் சிவகுமார்

(யாழ். பல்கலைக்கழக பௌதீக விஞ்ஞானப் பிரிவு இறுதியாண்டு மாணவன்)

அன்னை மடியில்: 10—06—1967 ஆண்டவன் அடியில்: 14—05—1993

நினையில்லா இவ்வுலகில் நிலவாய்த் தோன்றி
நீதி நிறை நற்புகழைப் பெற்ற செல்வ!
கலை பயிற்றும் பல்கலை சேர் கழகத் தின்கண்
கவினாகக் கற்கின்ற பேறு பெற்று
விலையில்லா விஞ்ஞான மாணியாக
விளங்குவாயென்றிருந்த வேளை விதியினாலே
மலை மகளின் மணாளன் நம் சிவன் மலரடியில்
மகனான சிவகுமார! மறைந்தாய் என்னே!

அன்னாரின் சபிண்டீகரணக் கிரியைகள் இன்று (24-06-93) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்வில் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

— குடும்பத்தினர்.

[illegible] நெல்லியடி, காரைநகர்.
(26221)

ஓம் சிவமயம்

ஆவரங்கால் சிவன் தேவஸ்தான
நடராச இராமலிங்கேஸ்வரர்

சப்பறத் திருவிழா

காலம்: 24—06—1993 வியாழக்கிழமை
பகல் 10 மணிக்கு அபிஷேகமும், பகல் திருவிழாவும்
பிற்பகல் 3மணிக்கு விசேட தவில் நாதஸ்வரக் கச்சேரி

நாதஸ்வரம்	தவில்
N. K. பத்மநாதன்	R. புண்ணியமூர்த்தி
P. நாகேந்திரன்	T. உதயசங்கர்
R. கேதீஸ்வரன்	P. முருகதாஸ்

சப்பறத் திருவிழா-உபயகாரர்கள்.

(5971)

அருள்மிகு - திருநெல்வேலி
தலங்காவற் பிள்ளையார் கோவில்

மஹோற்சவ கால தெய்வீக அருட்பேருரைகள்

பொருள்: **விநாயக புராணம்**

நிகழ்த்துபவர்: திரு. ஆறு. திருமுருகன் B. A.

காலம்: 24-06-1993 முதல் 03-07-1993 வரை (பத்து தினங்கள்)

நேரம்: இரவு 7-15 முதல் 8-30 வரை

★ 03—07—1993 பத்தாம் திருவிழா

இரவு சிறப்பு நிகழ்ச்சியாக

அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர்,
கம்பவாருதி திரு. இ. ஜெயராஜ் அவர்கள்
தலைமையில்

பட்டிமன்றம் இடம்பெறும்.
(கம்பன் கழக பேராளர்கள் பங்குபற்றுவர்)

செஞ்சொற் சீராளர்
திரு. த. சிவகுமாரன் B. A.
அவர்களால்

தினமும் இரவு 7-15 முதல் 8-30 மணி வரை
(யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர்- அமைப்பாளர் காரைநகர் கம்பன் கழகம்)

விடயம்

04—07—93 — தமிழ் மகள்
05—07—93 — பணியேன் ஒருவரை
06—07—93 — தோப்பாகும் தனிமரங்கள்-1
07—07—93 — தோப்பாகும் தனிமரங்கள்-11
08—07—93 — பெண்களில் தோன்றிய எம் பிராட்டி

சமய அருள் பேருரை நிகழ்த்தப்படும்.

திருநெல்வேலி-
தலங்காவல் இளைஞர்கள்.

விளம்பர அன்பளிப்பு:
ஆறுமுகம் சிற்பாலயம்,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
(26223)

ஹோட்டல் ஞானம்ஸ்

மீண்டும் புதிய மெருகுடன் சேவையாற்றுகின்றோம்

✶ அன்பான உபசரிப்பு
✶ உள்நாட்டு, வெளிநாட்டு பயணிகள் தங்குவதற்கு பல வசதிகள் நிறைந்த அறைகள்
✶ குளிர்பானங்கள்
★ மதுபானங்கள்
✶ குளிர் பியர் ஸ்ரவுட் மதுபானங்கள்
★ சுவையான தரமான உணவு வகைகள் (Eastern & Western)
✶ உணவுப் பார்சல்கள் (Burriyani, Fried Rice, Noodles, ETC) ஆகியவை முன் கூட்டியே ஓடர்களுக்கு வழங்கப்படும்.
✶ திருமணம், பிரியாவிடை மற்றும் மங்கள-விருந்துபசாரங்கள் செய்வதற்கான மண்டப வசதி.

எதுவானாலும்
உங்கள் விருப்பத்தை
உங்கள் திருப்திக்கேற்ப பூர்த்திசெய்ய
விஜயம் செய்யுங்கள்.

ஹோட்டல் ஞானம்ஸ்
299, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(ஐ-5298)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

திருடனுக்கு தண்டனை இல்லையா

மாரிஷில் இம்மாதம் 18ஆம் திகதி நடைபெற்ற இலங்கைக்கு உதவும் நாடுகள் குழுவின் கூட்டத்தில், இவ்வருடத்துக்கென 84கோடி அமெரிக்க டொலர்களை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. வழமை போலவே இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும், மடிப்படை உரிமைகளைப் பேணுவதில் மேலும் முன்னேற்றம் காணவேண்டும் என்ற குறிப்புரைகளுடன் இலங்கை அரசு கேட்டதைவிட 4 கோடி டொலர்களை கூடுதலாக வழங்குவதற்குக் குழுவில் உள்ள 13 நாடுகளும் முன்வந்தன.

இலங்கைக்கு உதவும் நாடுகளின் குழு, வருடாந்தம் கூடுவதற்கு முன்னர் இலங்கை அரசுக்குப் பலவித கண்டிப்புகளையும், எச்சரிக்கைகளையும் விடுவதும், பின்னர் கொழும்பு அரசு கேட்கும் அளவு நிதியைக் கொடுப்பதும் வழமை.

அதற்கேற்றதான அரச நடைமுறைப் பிரகாரம் அவசர கால விதிகளைத் தளர்த்தியும், தமிழர் பிரச்சினை தீர்க்கப்படாமலே நீண்டு செல்வதற்கான காரணத்தை மழுப்பியும், தாம் கேட்டதை விட 4கோடி டொலர்களைக் கூடுதலாகப் பெறுவதில் இளம் பிரதமர் திரு ரணில் விக்கிரமசிங்கா வெற்றிகண்டுவிட்டார்.

தாம் வழங்கும் நிதி உதவி' இலங்கையின் ஒரு தேசிய இனத்தை அழிப்பதற்குப் பயன்படுத்தப்படுகிறது என்பது சம்பந்தப்பட்ட நாடுகளுக்குத் தெரியாமல் இருக்கமுடியாது. ஆயினும் அவை கண்டும் காணாத தோரணையில் வருடாந்தம் நிதியை வாரி வழங்கிய வண்ணம் உள்ளன.

ஏழ்மை மலிந்த ஒரு சிறிய நாட்டினால் — இலங்கையினால் — வருடாந்தம் 2,000 கோடி ரூபாவுக்கு மேல் பாதுகாப்புக்குச் செலவிட முடிகிறது என்றால் அதன் சொந்தப் பணத்திலிருந்தா? இல்லை. வெளிநாடுகள், அபிவிருத்திக்கும், சமூக நலனுக்குமென வழங்கும் நிதி உதவிகளே பாதுகாப்புச் செலவில் ஒரு பகுதியாகிறது!

கொழும்பு அரசாங்கத்தின் இந்தத் திருட்டுத்தனம் குறித்து பாதிக்கப்பட்டுள்ள தமிழர் தரப்புக் கூறிய குற்றச்சாட்டுகளை சிறிதேனும் சரி பிழை பார்க்கக் கூட உலக நாடுகள், குறிப்பாக மேலை நாடுகள் நினைத்ததில்லை.

ஆனால் ஸ்ரீ லங்கா அரசாங்கத்தின் திருட்டுத்தனத்தை உலக வங்கி இப்போது கண்டு பிடித்திருக்கிறது! பொருளாதார வளர்ச்சிப் பணிகளுக்கென வெளிநாடுகள் வழங்கிய நிதி உதவிகளில் ஒரு பகுதி வடக்கு-கிழக்கு யுத்தத்துக்கு அரசினால் பயன்படுத்தப்பட்டதை உலக வங்கிக் குழு கண்டு பிடித்திருக்கிறது! இது குறித்து வங்கியின் தெற்காசிய இயக்குநர் பேரி இசென்மன் நிறுசேரி அதிகாரிகளை விசாரணை செய்திருக்கிறார்! ஜனாதிபதி விஜேதுங்காவுக்கு அரசின் திருட்டுத்தனம் குறித்து அறிவித்துமிருக்கிறார்!

இத்தனைக்கும் பிதகு, உலக வங்கியைச் சேர்ந்தபோல் ஐவன்சன் என்ற அதிகாரியின் தலைமையில் நடந்த பாரிஸ் மாநாட்டில் இலங்கை கேட்டதை விட கூடுதல் நிதி உதவிக்கு உறுதி அளிக்கப்படிருக்கிறது.

திருடனை தண்டிக்கும் நீதியமனின் சிறிய விதிமுறையைக் கூட்டக் கடப்பிடிக்காமல் மீண்டும் மீண்டும் திருட்டு வேலையைச் செய்யுமாறு உலக நாடுகள் இலங்கை அரசுக்கு ஊக்கமளிக்கின்றன. தமிழர்களை கொல்லுவதற்கு நேரிடையாக உதவுகின்றன.

அவ்வாறில்லை என்றால்— இலங்கை அரசைத் தண்டிக்கும் விதத்தில் அதற்கு வழங்கும் நிதி உதவிகளை நிறுத்த வேண்டும். யுத்தத்தை நிறுத்தி இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காணுமாறு அழுத்தம் கொடுக்க வேண்டும். யுத்தத்தை நிறுத்தினால் மட்டுமே நிதி உதவி தரமுடியும் என்று நிபந்தனை விதிக்க வேண்டும்.

தனது நலனுக்குச் சாதகமான பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நிபந்தனை விதிக்கும் உலக வங்கியினால் தமிழரை அழிப்பதனை நிறுத்துமாறு நிர்ப்பந்திக்க முடியாதா? மனவிருப்பம் இருந்தால் மிக இலகுவான காரியம் அது!

முதலாம் ஆண்டு அனுமதி:

பாடசாலை அருகில் வதியும் மாணவருக்கு முன்னுரிமை

கொழும்பு, ஜூன் 24

அரசாங்க பாடசாலைகளில் முதலாம் ஆண்டு அனுமதியில் பாடசாலைக்கு அருகில் இருக்கும் மாணவர்களை கூடுதலாக அனுமதிக்கும் வகையில் மாற்றம் வரவிருக்கிறது.

கல்வி அமைச்சு தொடர்பான நாடாளுமன்ற ஆலோசனைக்குழு இந்த மாற்றம் குறித்து ஆராய்ந்து வருகிறது.

அடுத்த வருட முதலாம் ஆண்டு அனுமதிக்கான விண்ணப்பத் திகதி இம்மாதம் 30 ஆம் திகதியுடன் முடிவடைய இருப்பதால் அனுமதி முறையை மாற்றியமைக்கும் யோசனைக்கு ஜனாதிபதியின் அங்கீகாரத்தை பெறுவதற்காக கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகள் குழு ஒன்று அவரை சந்திக்கவிருக்கிறது

உத்தேச திட்டத்தின்படி, குறிப்பிட்ட பாடசாலை ஒன்றின் பழைய மாணவர்களின் பிள்ளைகளுக்கும், அக்கல்லூரியில் கல்வி பயிலும் மாணவர்களின் சகோதரர்களுக்கும் வழங்கப்பட்டு வந்த அனுமதி முன்னுரிமை விதம் குறைக்கப்பட்டு பாடசாலைக்கு அருகில் இருக்கும் மாணவர்களுக்கான விதம் அதிகரிக்கப்படவிருக்கிறது.

கிழக்கில் சர்வசன வாக்கெடுப்பு:

தெரிவுக்குழு முடிவு செய்ததா அல்லது இல்லையா?

குழப்பம் நிறைந்த நிலை

கொழும்பு, ஜூன் 24

இணைப்பு விஷயம் குறித்து கிழக்கு மாகாணத்தில் சர்வசனவாக்கெடுப்பு நடத்துவதாக நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் கடந்த அமர்வில் முடிவு செய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வசன வாக்கெடுப்பு விஷயம் பற்றி அந்த அமர்வில் ஆராயப்பட்டது என்றும் — ஆனால் அது குறித்து முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை என்றும் மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் திரு ரணில் குணவர்த்தனா பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

சர்வசன வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று தெரிவுக்குழு தீர்மானித்துள்ளதாக பத்திரிகைகளில் வெளியான செய்தியை திருத்துவதற்கு தெரிவுக்குழு நடவடிக்கை எடுக்காதது குறித்து லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் மக்கள் ஐக்கிய முன்னணி ஆகியன எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

தெரிவுக் குழுவின் தலைவர் மங்கள முனசிங்கா வெளிநாடு சென்றுள்ளதால் இது தொடர்பாக மேல் நடவடிக்கை எடுக்க முடியாது இருப்பதாக இக்கட்சிகளின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமா அல்லது இல்லையா என்பது குறித்து தெரிவுக் குழு முடிவு செய்ததா என்பது பற்றி கடந்த 11ஆம் திகதியில் இருந்து குழப்பமான நிலை நிலவுகின்றது.

கடந்த 12ஆம் திகதி இது பற்றி மங்கள முனசிங்காவைக் கேட்ட போது, சர்வசன வாக்கெடுப்பை நடத்துவது என்று தெரிவுக் குழு ஏகமனதாக முடிவு செய்தது என்று கூறினார். அவரைச் சுற்றியிருந்த எம்பிக்களும், இந்த முடிவு ஏகமனதான ஒன்று என கூறினார்கள்.

சர்வசன வாக்கெடுப்பு பற்றிய தெரிவுக் குழுவின் நிலைப்பாடு பற்றி எதிர்க்கட்சி நாடாளுமன்றக் குழுக் கூட்டத்திலும் கடந்த வாரம் விவாதிக்கப்பட்டது.

சர்வசனவாக்கெடுப்பு நடத்துவது என்று தெரிவுகுழுவில் தீர்மானிக்கப்படவில்லை என்று அத்தாவுட செனவிரத்னா மற்றும் ராஜா கொலுரே ஆகிய எம்.பிக்கள் அப்போது தெரிவித்தனர்.

இந்த விவகாரம், தெரிவுக் குழுவின் அடுத்த அமர்வு அடுத்த மாதம் 6ஆம் திகதி நடைபெறும் போது விவாதிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

பொன்னாடை

நெல்லியடி தடங்கன் புளியடி முருகன் ஆலயத்தின் மஹோற்சவ காலத்தில் பதினொரு தினங்களும் கந்த புராண விரிவுரைகள் நிகழ்த்திய காரைநகர் கம்பன்கழக அமைப்பாளர் திரு. த. சிவகுமாரனுக்கு மந்திரிகை அரசினர் வைத்தியசாலை வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். கதிர்காமநாதம்பி, தேவஸ்தான நிர்வாக சபை சார்பில் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். (இ)

வயோதிபர் காயம்

தெல்லிப்பளையைப் பகுதியில் நிலை கொண்டுள்ள படையினர் நேற்றுக் காலை 8 மணியளவில் குடியிருப்புப் பகுதிகளை நோக்கிச்சரமாரியாகத் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். படையினரின் கூட்டுக்கு இலக்காகி வயோதிபர் ஒருவர் காயமடைந்ததாக தெரியவருகிறது. உ-5

இன்று

யாழ்ப்பாணக் கல்லூரி தமிழ் மன்றத்தினரின் "தமிழருவி" சஞ்சிகை வெளியீட்டு விழா இன்று பிற்பகல் 1-00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். (ஒ)

o o o

யாழ்ப்பாணம், ஜூன் 24

யாழ், மாவட்ட பரிபோவான் முதலுதவிச் சங்கமும், படையும் அமைப்பின் சென். ஜோன் நிர்வாக தினமும் வருடாந்த அணிவகுப்பும் இன்று வியாழன் பிற்பகல் 2-30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறும். (இ-118)

o o o

தவத்திருவடிவேல் சுவாமிகளின் மூன்றாவது ஆண்டு குருபூசைத் தினம் இன்று காலை 9-00 மணி தொடக்கல் மாலை 4 00 மணிவரை உடுவில் கிழக்கு கடவுள் சுவாமிகள் சமரச சன்மார்க்க நிலையத்தில் நடைபெறும்.

o o o

"நெருப்புக் காயிசலும், அதைத் தடுப்பதற்கான வழிமுறைகளும்" எனும் தலைப்பிலான கருத்தரங்கு ஒன்று இன்று வியாழன் பிற்பகல் 3 மணிக்கு மல்லாகம் விசாவாடகி வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறும். (ஒ)

o o o

இலங்கை தேசிய சர்வோதய சிரமதான சங்கத்தின் நல்லூர் பிரதேச நிலையத்தினால் இன்று காலை 9 மணி முதல் தையல் கண்காட்சி ஒன்று நடத்தப்படவுள்ளது. கண்காட்சியில் நல்லூர் பிரதேச நிலையத்துக்கு உட்பட்ட பல நிலையங்களின் உற்பத்திப் பொருள்கள் பார்வைக்கு வைக்கப்படும். (உ-143)

o o o

இலங்கை சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியில் கல்லூரி மாணவ மன்றத்தின் ஏற்பாட்டில் இன்று காலை 9 மணிக்கு "மகிழ் மருத்துவம்" என்னும் நூல் வெளியிடப்படும். முன்னாள் கல்லூரி அதிபர் வைத்திய கலாநிதி சுகந்தன் இன்னாசித்தம்பியின் உருவப்படத் திரைநீக்கமும் இந்நிகழ்வில் போது இடம்பெறும். (உ)

உணவு முத்திரை

நீர்வேலி ப.நோ.கூ.சங்க கிளைகளில் ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களுக்குரிய மானவர் இலவச மதிய உணவு முத்திரை [illegible] பருவகாலச் சீட்டுகள் [illegible] கப்படுகின்றன. (த-72)

மணிவாசகர் குருபூசை

அகில இலங்கைத் திருமுறை மாநாட்டினர் இன்று வியாழக்கிழமை மாலை 4 மணியளவில் நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் ஸ்வாமி ஆலயத்தில் மாணிக்கவாசக ஸ்வாமிகள் குருபூசை விழா விமரிசிறப்பாக கொண்டாடவுள்ளனர்.

மாலை 6 மணிக்கு மாணிக்கவாசக சுவாமிகளுக்கு பூசையைத் தொடர்ந்து திருவாசகப் பாராயணம், சொற்பொழிவு, திருவாசக இன்னிசைச்சாமரம் ஆகியன இடம்பெறும். (ஒ)

o o o

மாணிக்கவாசக சுவாமிகளின் குருபூசை இன்று வியாழன் பிற்பகல் 4-30 மணியளவில் ஆனைக்கோட்டை சிவன் கோயிலாகொண்ட மடத்தில் நடைபெறும்.

ஆனைக்கோட்டை இந்து சமய விருத்திச் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந் நிகழ்ச்சியில் "சித்தத்துள் சித்திக்கும் தேன்" என்னும் பொருள் குறித்து திரு க.கணேசலிங்கம் சொற்பொழிவாற்றுவார். (க-162)

o o o

வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் மாணிக்கவாசகர் குருபூசை இன்று காலை நடைபெறும். உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். நடேசபிள்ளை முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார். திரு இரா. செல்வவடிவேல் உரையாற்றுவார்.

o o o

உரும்பராய் சிதம்பர சுப்பிரமணிய சுவாமி கோவிலில்

பாடசாலைகளில்

பருத்தித்துறை கற்கோவளம் மெதடிஸ்தமிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் மெய்வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கற்கோவளம் பொது விளையாட்டரங்கில் அதிபர் திரு. செ. தங்கராஜா தலைமையில் நடைபெறும். (க)

o o o

யாழ் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியின் நிறுவுநர் தினவுவு பேருரையை யாழ்பல்கலைக்கழக பொருளியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. கா. கந்தையா வழங்குவார். (உ-5-89)

o o o

ஆனைக்கோட்டை பாலகப் பிரமணிய வித்தியாசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1 30 மணியளவில் அதிபர் திரு ஏ. வி. கணேசலிங்கம் தலைமையில் நடைபெறும். (க-162)

o o o

சாவகச்சேரி இந்துக்கல்லூரி தேசிய பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டதை அடுத்து இது சம்பந்தமான விழா நாளை வெள்ளிக்கிழமை கல்லூரி அருணாசலம் மண்டபத்தில் அதிபர் க சந்திரசேகரா தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக வடமாநில கல்விப்பணிப்பாளர் ஆர். சுந்தரலிங்கமும் சிறப்பு விருந்தினராக தமிழீழ அரசியல் பொறுப்பாளர் திரு ப. தமிழ்ச்செல்வனும் கலந்து கொள்வர். (ஒ-117)

o o o

தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை வருடாந்த இல்ல தடகள விளையாட்டுப் போட்டிகளின் இரண்டாவது கட்டம் இன்று பி. ப. 1. 30 மணிக்கு பாடசாலை புதிய வளவில் ஆரம்பமாகும்.

அதிபர் திரு. அலு. வை. நாகராசன் தலைமையில் நடைபெறும் இவ்நிகழ்வில் வாவட்ட பிரதிக்கல்வி பணிப்பாளர் திரு. இ. சொர்ணந்தன், கொற்றணி அதிபர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம், வலிகாமம் விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு பொறுப்பாளர் திரு. சத்தியா ஆகியோர் கலந்து கொள்வர். (அ)

கிளாலியில் மோதல்

தென்மராட்சி, ஜூன் 24

கிளாலி கடற்பகுதியில் நேற்று முன்தினம் இரவு 11 மணி முதல் சுமார் மூன்று மணி நேரம் மோதல் இடம் பெற்றதாகத் தெரியவருகிறது. (உ-117)

கெயர் பிரதிநிதி வருகை

யாழ்ப்பாணம், ஜூன் 24

"கெயர் இன்டர்நேஷன்" அமைப்பின் இரு வெளிநாட்டு பிரதிநிதிகள் நேற்றுக் காலை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

பெண்கள் அபிவிருத்திப் பணிகளுக்குப் பொறுப்பான செல்வி ஜூலிஸ் கோமியர், செல்வி நமரா ஆகிய இருவரும் இங்கு வந்துள்ளனர். [உ-5]

ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 24

ஜி. சி. ஈ உயர்தர வகுப்புக்களில் "அளவையிலும் விஞ்ஞான முறைகளும்" பாடத்தை கற்பிக்கும் ஆசிரியர்களுக்காக நாளையும் மறுதினமும் யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற இருந்த செயலமர்வு பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. (உ-162)

4 ஆயிரம் ஆசிரியர்களை நியமிப்பதற்கு அனுமதி

ஆசிரியர் பற்றாக் குறையை நிவர்த்தி செய்ய புதிதாக நாலாயிரம் ஆசிரியர்களை நியமிக்க நிறைவேரி கல்வி அமைச்சுக்கு அனுமதி வழங்கியுள்ளது.

ஆசிரியர்களை நியமிக்கும் திட்டத்தின் கீழ், கடந்தவருடம் ஜூன் மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் பட்டதாரியாக வெளியேறி இதுவரை நியமனம் கிடைக்காத 300 பட்டதாரிகளுக்கும் ஆசிரிய நியமனம் வழங்கப்படவிருக்கிறது

அரசாங்க பாடசாலைகளில் கொண்டர் ஆசிரியராகப்பணி புரிபவர்களில் நிரந்தர நியமனம் பெறத் தகுதியிருந்தும் இதுவரை அதை பெறாதவர்களுக்கும், நிரந்தர நியமனம் வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-3)

பிரேமா வீட்டில் ரூ. 8 கோடி: நாடாளுமன்றத்தில் கேள்வி

அரச தரப்பில் பதில் இல்லை

கொழும்பு, ஜூன் 24

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா பதுக்கொலை செய்யப்பட்ட பின்னர் அவரது சுசரித்த வாசஸ்தலத்தில் 7 கோடி 80 லட்சம் ரூபா பணம் கண்டுபிடிக்கப்பட்டதாக வெளியான செய்தி பற்றி நாடாளுமன்றத்தில் சுதந்திரக்கட்சி எம். பி சிறிபால டீ சில்வா கேள்வி எழுப்பினார்.

ஆனால் அரச தரப்பில் இக்கேள்விக்குப் பதில் அளிக்கப்படவில்லை.

"இவ்வளவு பெருந் தொகைப் பணம் கண்டுபிடிக்கப்பட்ட செய்தி பற்றி நாடே பேசுகிறது. கண்டுபிடிக்கப்பட்ட பணம் ஏழு கோடி ரூபாவுக்கு அதிகம் என்றும் சில பெரும் பத்திரிகைகள் செய்திகளை வெளியிட்டுள்ளன.

"இதுவரை இச்செய்தியை உறுதிப்படுத்தியோ அல்லது மறுத்தோ அரசாங்கம் அறிக்கை எதையும் வெளியிடவில்லை.

"இவ்வளவு பெருந் தொகைப் பணம் சாதாரண வீடு ஒன்றில் கண்டுபிடிக்கப்படிருப்பின் வருமான வரித் திணைக்கள அதிகாரிகள் அவ்வீட்டை முற்றுகையிட்டிருப்பார்கள்

"இப்போது இப்பிரச்சினையை நாடாளுமன்றத்தில் எழுப்பப்பட்டுள்ளது. ஆகவே இது தொடர்பான உண்மை நிலையை தற்போதைய அரசு தெளிவுபடுத்த வேண்டும்" — இப்படி அக்கேள்வியில் தெரிவிக்கப்படிருந்தது

அரச தரப்பில் இக்கேள்விக்குப் பதிலளிக்கப்படவில்லை.

ஆனால் கேள்வியை சம்பந்தப்பட்ட உறுப்பினர் கேட்டபோது ஆளுந்தரப்பில் இருந்து குறுக்கீடுகள் எழுந்தன

அரலிப்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ரைச் சந்தித்து தமது கஷ்ட நிலையை விளக்கி நிறுத்தப்பட்ட உணவு விநியோகத்தைத் தருமாறு கேட்டனர்.

எனினும் உறுதி அளிக்கப்பட்டது போல உரிய நடவடிக்கை எடுக்கப்படாததைத் தொடர்ந்து நேற்றுக்காலை மக்கள் நேற்று மறியல் போராட்டம் நடத்தினர்.

உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கால நவகாரம் தருமாறு பிரதேச சபை நிர்வாக உத்தியோகத்தர் கேட்டதைத் தொடர்ந்து — இம்மாதம் 30 க்கு முன்னர் நிறுத்தப்பட்ட உணவு நிவாரணம் வழங்கப்படாவிட்டால் மீண்டும் தாம் மறியல் போராட்டம் செய்வதாக கூறி மக்கள் கலைந்து சென்றனர். (அ-13)

அழுத்தம்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நுட்பத்தை விடுதலைப் புலிகள் மீண்டும் வெளிப்படுத்தி விருப்பதாலும் ஏராளமான அகதிகள் சாகுமென்றார்.

— இவ்வாறு பி. பி. சி. கருத்து வெளியிட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

போசாக்கின்மையால் குழந்தைகள் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 24

யாழ். மாவட்டத்திலுள்ள மூன்று வயதுக்கு உட்பட்ட குழந்தைகளில் 18.9 சதவீதத்தினர் அண்மைக்காலப் போசாக்கின்மையாலும், 40 சத வீதத்தினர் நீண்டகாலப் போசாக்கின்மையாலும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள போசாக்கின்மை தொடர்பான ஆய்வுகள் இதனைக் காட்டுகின்றன.

யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் ஆதரவுடன் யாழ். பல்கலைக்கழக சமுதாய மருத்துவத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் டாக்டர் எஸ். சிவராஜா தலைமையில் மருத்துவபீட மாணவர்கள், குடும்பநல சேவையாளர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் தொண்டர்கள் ஆகியோரின் உதவியுடன் இந்த ஆய்வுமேற்கொள்ளப்பட்டது.

நீண்ட நாட்கள் இடம்பெயர்ந்திருக்கும் குழந்தைகளிலே அதிக போசாக்கின்மை காணப்படுகிறது

பிறந்தவுடன் நிறைகுறைந்திருக்கின்ற குழந்தைகள் ஏனைய குழந்தைகளுடன் ஒப்பிடுகையில் இரு மடங்கு அதிகமாக போசாக்கின்மையால் பாதிக்கப்படுகின்றன.

ஒரு வயதுக்கு குறைவான குழந்தைகளை விட ஒரு வயதுக்கு மேற்பட்ட குழந்தைகள் மத்தியில் போசாக்கின்மை மூன்று மடங்கு அதிகமாகக் காணப்படுகிறது.

இப்படி ஆய்வில் தெரிவிக்கப்பட்டது. (க 162)

வெளியீட்டு விழா

"ஈழத்தச் சோழ" எழுதிய "நிலவோ நெருப்போ" என்ற சிறுகதைத் தொகுப்பு நூலும், "ஈழத்து இலக்கியம் — பல்துறை நோக்கு" என்ற நூலும் அண்மையில் இந்து கலாசார அமைச்சர் பி. பி. தேவராஜினால் வெளியிடப் பெற்றன.

இந்நூல்களின் வெளியீட்டு விழா கொழும்பில் இந்து கலாசார அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. [க]

6ஆவது கட்ட ம. எண்ணெய் விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூன் 24

அ. உ உலர் உணவு அட்டைகளுக்கும் இடம்பெயர்ந்தவர்களுக்கான உலர் உணவு முத்திரைகளுக்கும் 6ஆவது கட்டமாக ஒரு லீற்றர் மண்எண்ணெய் — 15 ரூபா வீதம் — விநியோகிக்கப்பட இருக்கிறது.

"மதராவ" கப்பலில் எடுத்து வரப்பட்ட மண்எண்ணெய்யே இவ்வாறு விநியோகிக்கப்படவுள்ளது. (ஒ-162)

வலி-மேற்கு விவசாயிகள் தானிய உற்பத்தியில் ஆர்வம்

வலிகாமம் மேற்கில் விவசாயிகள் தானிய உற்பத்தியில் அதிக அக்கறையுடன் ஈடுபட்டுவருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த மார்ச் மாதத்தில் 30 ஹெக்டரில் பாசிப்பயறு பயிரிடப்பட்டு பெரும் விளைச்சல் பெறப்பட்டது. தற்போது 35 ஹெக்டர் நிலத்தில் குரக்கன் பயிர் செய்யப்படுகின்றது. மே, ஜூன் மாதங்களில் அராலி மேற்கு, அராலி மத்தி கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 4 ஹெக்டர் வரை பாசிப்பயறு பயிரிடப்பட்டுள்ளது.

இதேவேளை—

ஐக்கிய இராச்சிய சிறுவர் பாதுகாப்பு நிதியம், யு. எஸ். எயிட்ஸ் மற்றும் தமிழர் நலன்காக்கும் பிரிவு ஆகிய வற்றின் [illegible] களின் கீழ் 25 ஹெக்டர் வரை குரக்கன் பயிரிடப்பட்டுள்ளது. (த-12)

முக்கிய அறிவித்தல்

கரன் வர்த்தக ஸ்தாபனம்,
தட்டாதெரு,
யாழ்ப்பாணம்.

மேற்படி விலாசத்தில் பவிபுரிந்த கந்தசாமி விஜயகுமார் (குமார்) என்பவரை எமது ஸ்தாபனத்தில் இருந்து 13-06-1993 தொடக்கம் நீக்கியுள்ளேன். எம்மை சகல வர்த்தக ஸ்தாபனங்களுக்கும், வாடிக்கையாளர்களுக்கும் அறியத்தருகின்றேன். அவருடன் மேற்கொண்டு நடைபெறும் கொடுக்கல் வாங்கல்களுக்கு எமது ஸ்தாபனம் பொறுப்பல்ல என்பதை அறிவித்தருகின்றேன்.

கோ. சங்கரலிங்கம்

(26227)

அமரர் தவில்மேதை N. R. சின்னராசா நினைவு இசைப் போட்டிக்கான அறிவித்தல்

26-6-93, 27-6-93 ஆம் திகதிகளில் நடைபெற இருந்த மேற்படி தங்கப்பதக்கப் போட்டிகள் 3-7-93 (சனிக்கிழமை) மு. ப. 8.30 மணிக்கு இணுவில் இளந்தொண்டர் சபை மண்டபத்தில் நடைபெறும்.

30-6-93 வரையில் போட்டிக்கான அனுமதி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளாத போட்டியாளர்கள் சபையினருடன் தொடர்பு கொள்ளவும்.

இளம் தொண்டர் சபை
இணுவில் கந்தசுவாமி கோவில்
இணுவில்.

(5973)

முதலாம் வருட நினைவஞ்சலி

தோற்றம் 22 — 02 — 1936

மறைவு 04 — 07 — 1992

கோவை மகேசன்

திதி: 24—06—93

உயிர் தமிழுக்காகவும் உடல் மண்ணுக்காகவும் வாழ்ந்திட்ட தமிழீழ எழுத்தாளன் கோவை மகேசன் (இ. மகேஸ்வரசர்மா) அவர்கள் ஆன்மா சாந்தியடைய எமது இதய அஞ்சலிகளைச் சமர்ப்பிக்கின்றோம்.

மனைவி,
சகோதரன், குடும்பத்தினர்.

வீரபத்திர கோவில்,
கோப்பாய்.

(26226)

31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 25 — 03 — 1928

★

மறைவு 25 — 05 — 1993

திருமதி இராசம்மா சின்னத்தம்பி
(மதுரம்)

எம் அன்பிற்கும், பாசத்திற்கும் பிறப்பிடமாகிய தெய்வமே! நீங்கள் எமை விட்டுப் பிரிந்து மீனாத்துயில் கொண்டு ஒரு மாத காலமானாலும் உங்கள் நினைவு எம்மை விட்டு மாறாது, மறையாது.

எம் அன்புத் தாயாரின் மரணச் சடங்குகளில் பங்கு பற்றியும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும், பலவிதத்திலும் உதவியளித்த அனைவருக்கும் எங்கள் உளங்கனிந்த நன்றிகள்.

அன்னாரின் இல்லத்தில் இன்று (24-06-1993) நடைபெறும் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் தவறாது கலந்து கொள்ளுமாறு உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

"யோகஸ்தாஸ்",
காரவாய் தெற்கு,
கரவெட்டி.

(26225)

வண்ணை மேற்கு ஸ்ரீ விசுவேசப் பிள்ளையார் கோவில்
(ஐயனார் கோவிலடி)

வருடாந்த மகோற்சவம் இன்று வியாழன் (24 - 06 - 1993) ஆரம்பமாகிறது. இதனை முன்னிட்டு தினம் தோறும் மாலை 8-30 — 9-30 வரை (24 - 06 - 1993 — 03 - 07 - 1993) பத்து நாட்களும் விநாயக பெருமானைப் பற்றி பின்வரும் விடயங்களில் சொற்பொழிவு இடம்பெறும்.

நிகழ்த்துபவர்:
அருள் மொழிச் செல்வர்
வாகீச கலாநிதி
கனகசபாபதி நாகேஸ்வரன் M A.

பொருளும்	நாளும்
விநாயக மகத்துவம்	24—06—1993
விநாயக அகவல்	25—06—1993
ஞான விநாயகன்	26—06—1993
பிள்ளையார் கதை	27—06—1993
ஏரந்தர்	28—06—1993
கஜமுக அவதாரம்	29—06—1993
தம்பிக்கு திருமணம்- முடித்து வைத்தவர்	30—06—1993
சித்தி விநாயகர்	01—07—1993
வல்லவ கணேசர்	02—07—1993
விநாயகருக்கு மூன்று பெண்களா?	03—07—1993

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

— ஐயனார் கோவிலடி இளைஞர்கள்.

(26224)

மாபெரும் ★ உதைபந்தாட்டம் ★

யாழ். மாவட்ட முன்னணி உதைபந்தாட்டக் குழுக்கள் பங்கு கொள்கின்றன.

காலம்:- 26 — 06 — 93 சனிக்கிழமை மாலை 3 மணி
27 — 06 — 93 ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணி

இடம்:- இணுவில் கந்தசாமி கோவில் அருகில் உள்ள புதிய விளையாட்டு அரங்கு

நடத்துபவர்கள்:- தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

விளம்பர அன்பளிப்பு:

K. B. S. போட்டோ
மதவடி
சுன்னாகம்.

Quick Photo
[கலர்பட பிறின்ரிங்]
மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(6282)

31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு: 03 — 09 — 1906

மறைவு: 25 — 05 — 1993

அமரர்
தம்பையாபிள்ளை குணரெத்தினம்
(நயினாதீவு)

பாசத் துறைவிடமாய், பண்பின் திருவுருவாய், நேசித் தெமைவளர்த்து நீங்கினையே தேவற்ற ஐயாவே! எங்கள் அகல்விளக்கே! நெஞ்சுருகி வைகுப்பினோம் வழிநீ காட்டு.

எமது குடும்பத் தலைவரின் மரணச் செய்தி கேட்டு தேரில் வந்தவர்களுக்கும், அனுதாபம், ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் எமது இதயம் கலந்த நன்றியைக் கூறுகின்றோம்.

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரபிள்ளைகள்.

அம்மன் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(26210)

ஆலயங்களில்

சங்கானை கூடத்து மனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும். (உ)

○ ○ ○

சாவகச்சேரி மண்டுல் அம்மன் (சோலை அம்மன்) தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் இன்று வியாழக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும்.

அடுத்த மாதம் 2 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 3 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும். (ஒ 117)

○ ○ ○

கைதடி வடக்கு கயிற்றுப் பெட்டி அருள்மிகு ஸ்ரீகந்தசாமி கோவில் வருடாந்த உற்சவம் இன்று நண்பகல் 12.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும். (உ-30)

○ ○ ○

சுன்னாகம் மயிலணி கந்தசாமி கோவில் தேர்த்திருவிழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறுகின்றது. மறுநாள் சனிக்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்த திருவிழா நடைபெறும். (உ-152)

○ ○ ○

வண்ணார்பண்ணை ஸ்ரீவிசுவேசப் பிள்ளையார் கோயில் வருடாந்த மகோற்சவம் இன்று வியாழன் காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் முதலாம் திகதி சப்பறமும், இரண்டாம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

நினைசரி நெற்பு நிகழ்ச்சியாக இரவு 8.30 மணிக்கு வாகீசகலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரனின் தொடர் சொற்பொழிவு நடைபெறும்.

○ ○ ○

ஆவரங்கால் சிவன் தேவஸ்தான நடராச இராமலிங்கேஸ்வரர் சப்பரத்திருவிழா இன்று மாலை இடம்பெறும். (உ-89)

○ ○ ○

திருநெல்வேலி ஸ்ரீ முத்து மாரி அம்மன் கோவில் தேர்த் திருவிழா நாளை காலை 7 மணிக்கு நடைபெறும். மறுதினம் தீர்த்தத் திருவிழா இடம்பெறும். (உ-111)

○ ○ ○

அளவெட்டி தெற்கு அருள்மிகு பெருமாள் கடவை பிள்ளையார் கோவில் வருடாந்த மகோற்சவம் இன்று மு. ப. 11 மணிக்கு இடம்பெறும் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். (அ-13)

○ ○ ○

சிறுப்பிட்டி தனங்கலட்டிப்பதி செல்லப்பிள்ளையார் ஆலய மண்டலாபிசேகத்தை முன்னிட்டு தினமும் தெய்வீகப் பேருரைகள் நடைபெற்று வருகின்றன. இன்றும், நாளையும் மூத்த சமயச் சொற்பொழிவாளர் பிரம்மஸ்ரீ ச. ஈவிரசர்மா முறையே "வையக வாழ்வு" "மங்கள நாயகி" என்னும் பொருள்களில் உரையாற்றுவார்.

○ ○ ○

நுணாவில் கிழக்கு (சிவபூத வராயர்) கோவிலில் நாளை வருடத் திருவிழா நடைபெறும். காலையில் விசேட பூசைகளுடன் ஆரம்பித்து இரவு நடேசர் அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். சனிக்கிழமை காலை ஆனி உத்தர தரிசனம் நிகழும்.

நாளை

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தொண்டமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடத்தும் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு கலாவிநோதன் சின்னமணி குழுவினரின் "திருநீலகண்டர்" எனும் பொருளான விவிசைஇடம் பெறும். (ஈ)

○ ○ ○

மருதனார்மடம் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான விவசாய அறிவுப் போட்டிகள் கோட்ட மட்டத்தில் நாளை வெள்ளிக்கிழமை இராமநாதன் கல்லூரியில் நடைபெறும். (உ-152)

○ ○ ○

சங்கானை சென். செபஸ்தியார் இடம் பெயர்ந்தோர் முகாமில் நாளை காலை 8 மணி முதல் யாழ். மாவட்ட தொழுநோய்க் கட்டுப்பாட்டு உத்தியோகத்தர் திரு. மு. குணரட்னம் தலைமையில் தொழு நோய்க்கான ஆய்வு மேற்கொள்ளப்படும். (உ-152)

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்

வருடாந்த பொதுக் கூட்டம் - 1993

மேற்படி பொதுக் கூட்டம் 11-7 93 ஞாயிறு பிற்பகல் 2 30 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் ஆரம்பமாகும். பிரேரணைகள், கேள்விகள் பற்றிய முன்னறிவித்தல் 6-7-1993 இற்கு முன்னர் எழுத்து மூலம் செயலாளருக்கு கிடைக்கப்பெற வேண்டும்.

1993 இற்கு அங்கத்துவம் புதுப்பிக்காதவர்கள் கூட்ட நேரத்துக்கு முன்னர் புதுப்பித்துக் கொள்ளும்படி கேட்கப்படுகின்றீர்கள்.

23 6-1993. எஸ். கந்தசாமி
(26228) (செயலாளர்)

75 ஆம் நாள் நினைவலைகள்

விஞ்ஞான ஆசிரியர்
க. புவனேந்திரன்
[உபதலைவர், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ். கிளை]

அன்பிற்கோர் இலக்கணமே
ஆசிரிய நிலமே
ஒழுக்கத்தை நெறிப்படுத்தும்
ஓர் உன்னத ஆசிரியரே
மக்கள் சேவைக்காய்
மண்ணின் வாழ்வுக்காய்
மரணித்தீர்
கண்ணீரைக் காணிக்கையாக்குகிறோம்.

பழைய மாணவர் சங்கம்.
யாழ் கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்.

(26229)

மரண அறிவித்தல்கள்

செல்லையா தம்பிராசா
(இளைப்பாறிய நீர்ப்பாசன திணைக்கள உத்தியோகத்தர்)

புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்த செல்லையா தம்பிராசா 23-6 93 இல் காலமானார்.

இவர் செல்லையா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரரும், இராசம்மாவின் அன்புக் கணவரும், புனிதவதி, தயனொளிபவன் (நோர்வே), சிவனொளிபவன், சவுந்தலாதேவி, சுமதி ஆகியோரின் அன்புத் தந்தையும், நாகம்மா, சிவசுப்பிரமணியம், சிவபாக்கியம், குஞ்சிலம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவசிதம்பரம், நாகமுத்து, வேலுப்பிள்ளை, சரஸ்வதி அம்மா, அன்னபூரணம், சிவசுப்பிரமணியம், ஆறுமுகநாதன் (கட்டிட ஒப்பந்தகாரர்), பரம்சோதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (23-6-93) இல் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக விலங்கன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
உடையார் வளவு, சிவனொளிபவன்
புன்னாலைக்கட்டுவன், தெற்கு. (மகன்)

திரு. P. S அருளானந்தம்
(இளைப்பாறிய கூட்டுறவுச் சங்கப் பரிசோதகர்)

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலியில் வசித்தவருமாகிய அருளானந்தம் டென்மார்க்கில் 10. 6. 93 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் ஞானம்மா, பேதுருப்பிள்ளை இளப் தம்பர், யின் ஏகபுதல்வனும், மேரி மாகிறேற் யோசப் (ஒய்வு பெற்ற ஆசிரியை), டெய்சி யோசப், மாசில்லா மரியரட்ணம் செபஸ்தியாம்பிள்ளை (ஒய்வுபெற்ற ஆசிரியை) யின் அன்புச் சகோதரரும் ஆவர். அன்னாரின் நல்லடக்கம் டென்மார்க்கில் நடைபெற்றது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மேரி மாகிறேற்
4, மருதடி வீதி, நல்லூர். (சகோதரி) (26219)

நாகநாதி சோமசுந்தரம்

புளியங்கூடலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய நாகநாதி சோமசுந்தரம் காலமாகிவிட்டார்.

இவர் கமலத்தின் அன்புக் கணவரும், ஆறுமுகத்தின் சகோதரரும், கண்ணம்மா, பொன்னுத்துரை, பரமேஸ்வரி இராசதுரை, நாகேஸ்வரி, நடராஜா (U.K.), சரோஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும், திருநாவுக்கரசு(கொழும்பு), சண்முகநாதன், தனநாயகம் (தினேஷ் புத்தகசாலை), உலகநாதன், பரமேஸ்வரி, வல்லிநாயகி, ஜோதீஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவகுமார் (கனடா), வசந்தா தேவி, இந்திரராணி (ஜேர்மன்), சந்திரநாதன்(கனடா), சாந்தினி, லலிதா (கொழும்பு), புவனேந்திரராஜா (கனடா), ஜெயக்குமார் (கவிஞர்), ஜெயந்தி (கொழும்பு), ஜெயசீலன், ஜெயச்சந்திரன், ரவிச்சந்திரன், கிருபாகரன், அனுஷா, வனஷா, கிருஷா, தனுஷா, மயூரன், சைலஜா, தர்சன், சுதர்சன், செந்தூரன், நர்மதா, சுபாகனி, சுபாகரன், சுபாஜினி, நிருபா, சுபாஜனன், சயந்தன், சயனுகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

ஈமக்கிரியைகளுக்காக பூதவுடல் இன்று 24-6-93, பிற்பகல் 1-00 மணிக்கு செம்பியன்மகள் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
18/10, இராமநாதன் வீதி, கு. தனநாயகம்
யாழ்ப்பாணம். (மருமகன்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 191/1 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 24-06-1993 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org